கலை, இலக்கிய விமர்சகர் மு.நித்தியானந்தனுடன் முகநூலிலோர் உரையாடல்!

Written by - வ.ந.கிரிதரன் -
Saturday, 11 July 2020 19:38 - Last Updated Monday, 13 July 2020 02:03

-அண்மையில் முகநூலில் லடீஸ் வீரமணியின் நாடகப்பங்களிப்பு பற்றிய வ.ந.கிரிதரனின் பதிவொன்றையொட்டி கலை, இலக்கிய விமர்சகர் மு.நித்தியானந்தன் அவர்கள் தெரிவித்திருந்த கருத்துகளிவை. - பதிவுகள் -

---

நித்தியானந்தன் முத்தையா: "1967 இல் ஊவாக் கல்லூரி நடத்திய கலை விழாவில் முற்போக்கு இலக்கியத்தின் மூத்த தலைமுறையாளர் அ.ந.கந்தசாமி அவர்கள் 'நாடகத்தை ரசிப்பது எப்படி?' என்ற பொருளில் ஆற்றிய சொற்பொழிவு ரசனை மிகுந்த ஒன்றாகும். இவரது மறைவையடுத்து ஊவாக் கல்லூரித் தமிழ் மாணவர் மன்றம் அன்னாருக்கு முதல் அஞ்சலியைத் தெரிவித்து இரங்கற் கூட்டம் நடத்தியது." இது தினகரன் வார இதழில் 'துங்கிந்த சாரலில் ...ஒரு பதுளைக்காரனின் இலக்கியப் பதிவுகள்' என்ற தொடரில் (3.12. 1995) நான் எழுதிய குறிப்பு.

அப்போது ஊவாக் கல்லூரித் தமிழ் மாணவர் மன்றத்தின் செயலாளராக நானும் மலர்ப் பொறுப்பாளராக எஸ்.கணேசனும் செயற்பட்டோம். கொழும்பு சென்று அ.ந.கந்தசாமி அவர்களைச் சந்தித்து இப்பேச்சுக்கு ஒழுங்கு செய்தோம். எங்கள் கல்லூரித் தமிழ் மன்றம் வெளியிட்ட 'இலக்கிய வெளியீடு' மலரில் நான் எழுதியிருந்த 'கம்பனும் பொதுவுடைமையும்' கட்டுரையைப் பாராட்டி அ.ந.கந்தசாமி அவர்கள் தனது உரையில் பாராட்டியது எனக்கு அப்போது பெரும் மகிழ்ச்சியாய் இருந்தது.

அ.ந.கந்தசாமி அவர்கள் உரையாற்றிய கடைசிக் கூட்டம் அவர் எங்கள் கல்லூரியில் பேசிய

1 / 3

கலை , இலக்கிய விமர்சகர் மு ,நித்தியானந்தனுடன் முகநூலிலோர் உரையாடல் !

Written by - வ.ந.கிரிதரன் -
Saturday, 11 July 2020 19:38 - Last Updated Monday, 13 July 2020 02:03

கஷ்டம் என்று நினைக்கிறேன். அப்போது அவர் எழுதி, பாரி நிலைய வெளியீடாக வெளிவந்திருந்த 'வெற்றியின் ரகசியங்கள்' என்ற நூலை எனக்குத் தந்திருந்தார். கொழும்பு சென்றபின், எனக்கு நன்றி தெரிவித்துக் கடிதமும் எழுதியிருந்தார். ஒரு சாதாரண பாடசாலை மாணவன் ஒருவனுடன் அவர் கொண்டிருந்த நேசஉணர்வு எனக்கு அவர் மீது பெரும் மதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அவர் தனது இறுதிக் காலங்களில் நோய்வாய்ப்பட்டிருந்தபோது, லடீஸ் வீரமணியும் அவரது துணைவியாரும் அ.ந.கந்தசாமி அவர்களைக் கவனமாகப் பராமரித்தனர்.

எங்கள் கல்லூரியின் கலைவிழாவின் முடிவில் லடீஸ் வீரமணி அவர்களின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நேரம் கடந்து விட்டதால் கூட்டத்தினர் வெளியேறிக்கொண்டிருந்தனர். ஒருவரைப் பார்த்து ஒருவர் வெளியேறிக்கொண்டிருக்க, லடீஸ் வீரமணி அவர்கள் 'சாஞ்சா சாய்ற பக்கம் சாய்ற மந்தைக் கூட்டங்களா!' என்று வில்லுப்பாட்டில் இசைத்தார். அவர் இந்திய வம்சாவளியினர். அமைச்சர் செல்லையா குமாரசூரியர் முயற்சியில் அவருக்கு இலங்கை பிரஜாவுரிமை கிடைத்தது. அவர் ஐரோப்பாவிற்கு சென்று வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்தியதாக நான் அறியவில்லை. அவ்வாறாயின் அத்தகவல்களைப் பெறுவது அவ்வளவு சிரமமாக இராது என்று நினைக்கிறேன்.

நித்தியானந்தன் முத்தையா : ஊவாக் கல்லூரியின் கலைவிழா நிகழ்ச்சியில் நாங்கள் தயாரித்த நோட்டீஸில் 'நாடகத்தை ரசிப்பது எப்படி?' என்று அ.ந.கந்தசாமியின் பேச்சுக்குத் தலைப்பிட்டிருந்தோம். அப்போது எங்கள் கல்லூரியில் படிப்பித்த ஒரு பால பண்டிதர் 'ரசிப்பது' என்பதனை மாற்றி 'இரசிப்பது' என்று திருத்தினார். இலக்கண விதி என்க! அ.ந.கந்தசாமியின் 'வெற்றியின் இரகசியங்கள்' என்ற தலைப்பில் புத்தகம் வெளிவந்தபோது அது இலக்கண விதி என்று அமைதி கண்டோம்.

நவரத்தினம் கிரிதரன் : வழக்கில் நீண்ட நாள்களாக இருப்பதை ஏற்பதும் இலக்கண வழக்கே. அதற்கமைய இது போன்ற இலக்கண மீறல்களை ஏற்பதில் எனக்குச் சம்மதமே. பிறமொழிகளைத் தமிழில் எழுதுகையில் இவ்விதமான தவறுகளை ஏற்றுக்கொள்ளலாமென்றால் , உதாரணத்துக்கு 'ரப்பர்' என்பதைத் தமிழ்ப்படுத்தினால் வேறு அர்த்தம் தரும் இரப்பர் என்று எழுத வேண்டும். அதைவிட 'ரப்ப'ரே மேல் என்பேன். ரகசியமும் வடசொல். தமிழ்ப்படுத்தி இரகசியம் என்று எழுதினாலும், பிறமொழி என்பதால் அப்படியே ரகசியம் என்று எழுதினாலும் சரி என்பதே என் முடிவு. இதுபோல் ராஜதானி/இராஜதானி, ராஜா/இராஜா. ராணி/இராணி இவற்றை எப்படி எழுதினாலும் சரி என்பதே என் நிலைப்பாடு.

2 / 3

கலை , இலக்கிய விமர்சகர் மு ,நித்தியானந்தனுடன் முகநூலிலோர் உரையாடல் !

Written by - வ.ந.கிரிதரன் -
Saturday, 11 July 2020 19:38 - Last Updated Monday, 13 July 2020 02:03

[illegible]

3 / 3